பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 10 2024 **FRIDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியா – மலாவி இடையே வேளாண்மை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- நாட்டின் வளர்ச்சி மற்றும் ஏழை மக்களுக்கு அதிகாரமளித்தலுக்காக தேசிய ஜனநாயக கூட்டணி உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மாற்றுத் திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்டு அரசு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருவதாக மாநில வேளாண் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.
- வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.
- லண்டன் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி கோப்பையை வென்றார்.

>>>><<<<

இந்தியா – மலாவி இடையே வேளாண்மை, சுரங்கம், எரிசக்தி, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தமது மூன்று நாடுகள் பயணத்தின் இறுதிகட்டமாக நேற்று அவர் மலாவி சென்றடைந்தார்.

அங்கு நடைபெற்ற இந்திய – மலாவி வர்த்தக கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் அதிகரித்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மலாவியின் நான்காவது பெரிய வர்த்தக கூட்டாளியாக இந்தியா திகழ்கிறது என்று அவர் கூறினார்.

மலாவியின் பல்வேறு துறைகளில், இந்தியாவின் சார்பில் 500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அங்கு வசிக்கும் இந்தியர்களை சந்தித்து உரையாடினார்.

சிறப்பு வாய்ந்த பணிகளில் தொடர்ந்து ஈடுபடுமாறு அவர்களை குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

மலாவி அதிபர் திரு. **Lazarus Chakwera-**வுடன் திருமதி. திரௌபதி முர்மு இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

பல்வேறு விவகாரங்களில் பிரதிநிதிகள் நிலையிலான கூட்டமும் நடைபெறவுள்ளது.

**>>>><<<<**

ஆயுர்வேத ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் உலகளாவிய வாய்ப்புகள் குறித்த சர்வதேச மாநாட்டை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மருத்துவத் துறையில் ஆயுர்வேதத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

மருத்துவ முறைகளில் ஆயுர்வேத சிகிச்சை எதிர்காலத்தில் முக்கிய இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், 2014ஆம் ஆண்டு முதல் ஆயுர்வேத முறை சிறந்த வளர்ச்சியை கண்டுள்ளதாக தெரிவித்தார்.

சர்வதேச அளவில் இதனை பிரபலப்படுத்த பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளதாக திரு. பிரதாப் ராவ் ஜாதவ் குறிப்பிட்டார்.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், உடல்நலனுக்கு ஆயுர்வேத மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

**>>>><<<<**

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம், உதகையில் மழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - சாமிநாதன் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாற்றுத் திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்டு அரசு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருவதாக மாநில வேளாண் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கான அரசு மேல்நிலைப் பள்ளியின் பொன்விழா நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்புகளை பெறும் வகையில், தனியார் துறை சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறினார்.

>>>><<<<

மூத்த குடிமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், முதியவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக மாநில சமூகநலத் துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரம் முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

முதியோர்களை பராமரிக்க வேண்டும் என்பது குறித்து பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தி வளர்க்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

திருச்செந்தூர், திருவண்ணாமலை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் முதியோர் இல்லங்கள் அரசு சார்பில் அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடாது என்பதே சமூகநலத் துறையின் நோக்கம் என்று திருமதி. கீதாஜீவன் குறிப்பிட்டார்.

\>>>><<<<

நாட்டின் வளர்ச்சி மற்றும் ஏழை மக்களுக்கு அதிகாரமளித்தலுக்காக தேசிய ஜனநாயக கூட்டணி உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அவர் சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

சிறந்த நிர்வாகம் மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களின் 17 முதலமைச்சர்கள் மற்றும் 18 துணை முதலமைச்சர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

\>>>><<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதாக ஆட்சியர் திரு. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி, கோவில்பதாகை ஏரி, கணபதிநகர் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை பார்வையிட்ட பின் அவர் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 43 செகண்ட்ஸ்)

\>>>><<<<

இருவரிச் செய்திகள்

மொரீசியஸ் நாட்டில் புதிய தண்ணீர் குழாய் அமைப்பதற்கான திட்டத்திற்காக இந்தியா 487 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

>>>><<<<

நாடாளுமன்றத்தில் விவாதங்களை மேற்கொள்ளவும், ஆவணங்களை காப்பதற்கும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

மத்தியப்பிரதேசம், பஞ்சாப், உத்தரபிரதேச மாநிலங்களில் நெடுஞ்சாலைகளை புதுப்பிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

>>>><<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது..

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலம், **Dibalong** ரயில் நிலையத்தில் அகர்தலா – லோக்மான்யா திலக் எக்ஸ்பிரஸ் ரயிலின் 8 பெட்டிகள் நேற்று தடம்புரண்டன.

>>>><<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடியை ஊக்குவிப்பதற்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 4 கோடியே 37 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் கீழ், இதுவரை 57 ஆயிரம் பயனாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. சரயு தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறவுள்ளது.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

லண்டன் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி கோப்பையை வென்றார்.

இறுதியாட்டத்தில் அவர் பிரான்ஸின் **Maxime Vachier Lagrave-**ஐ 2-1 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றார்.

**>>>><<<<**

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹகன் கபூர் - ருத்விகா ஷிவானி கடே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 21-14, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Wei Liang Tan – Ling Yap** இணையை வென்றது.

**>>>><<<<**

**Almaty** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, அர்ஜென்டினாவின் **Guido Andreozzi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் **Shevchenko – Timofey Skatov** இணையை வென்றது.

**>>>><<<<**

தமிழ்நாடு – தில்லி அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

தில்லியில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

**>>>><<<<**